
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 29.05.2025 வியாழக்கிழமை இதழ் : 149 பக்கங்கள் : 12


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# மீனவர் இன்னலை போக்க கச்சதீவை மீட்பதே ஒரே வழி!

## தமிழக முதலமைச்சர் அறிவிப்பு



சென்னை, மே 29

“தமிழ்நாட்டு மீனவர்களின் இன்னல்களைப் போக்க கச்சதீவை மீட்பதே ஒரே வழி”, என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சூரை மீன்பிடித் துறைமுக திறப்பு விழாவில் உரையாற்றியபோதே முதலமைச்சர் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார் என்று தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், கடந்த 4 ஆண்டுகளில் இடம் பெற்ற 97 கைது நடவடிக்கைகளில் ஆயிரத்து 383 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 185 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மீனவர்களை மீட்க வலியுறுத்தி இந்திய மத்திய அரசுக்கு இதுவரை 76 கடிதங்களை தான் எழுதியுள்ளார் என்றும் எனினும், இந்த பிரச்னைக்கு இதுவரை தீர்வு கிட்டவில்லை எனவும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (அ-ஐ)

# உகந்தைமலை புத்தர் சிலையை அரசாங்கம் அகற்றவேண்டும்!

## சிறீநேசன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 29

“உகந்தைமலையில் புத்தர் சிலையை அமைத்து, சட்ட விரோதமாக மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகிற செயல்பாடுகளை அடிப்படைவாதிகள் கைவிட வேண்டும். அரசாங்கம் விழிப்பாக செயல்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல், தேவையற்ற விளைவுகள் கடந்த காலங்களில்

11

# சுமந்திரன், கஜேந்திரகுமார் நாளை சந்தித்துப் பேசுவர்?

- சி.தில்லைநாதன் -

வடமராட்சி, மே 29

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சந்தித்து பேசவுள்ளனர் என்று எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

11

## வடக்கு, கிழக்கு அபிவிருத்தி:

# ஜனாதிபதியின் கோரிக்கைக்கு சில அதிகாரிகள் முட்டுக்கட்டை!

## வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன்

கொழும்பு, மே 29

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வடக்கு, கிழக்கு மாகாணங்களை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தபோதிலும் கொழும்பிலுள்ள சில திணைக்கள அதிகாரிகள் அவற்றுக்கு முட்டுக்கட்டைபோடும் விதத்தில் செயல்படுகின்றனர் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் இலங்கைக்கான செயல்பாட்டு முகாமையாளர் அபிட் கலி, செயல்திட்ட தலைவர் காயத்திரி சிங் உள்ளிட்ட உலக வங்கிக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து பேசினர். இதன்போதே ஆளுநர்

11

# தமிழின அழிப்பு நினைவுத் தூபி இனந்தெரியாதவர்களால் சேதம்!


## கனடா பொலிஸார் தீவிர விசாரணை

ஒட்டாவா, மே 29

இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பில் உயிரிழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக, கனடா பிரம்டன் நகரில் திறந்துவைக்கப்பட்ட தமிழின அழிப்பு நினைவுத் தூபி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

பிரம்டன் நகரில் சிங்காவுசி பூங்காவில் தமிழின அழிப்பு நினைவுத் தூபி கடந்த 10ஆம் திகதி

11



# திருமலை மாநகர முதல்வர் தெரிவு!

- பா. விபூஷிதன் -

திருகோணமலை, மே 29

திருகோணமலை மாநகர சபையின் முதல்வராக கந்தசாமி செல்வராசா (சுப்ரா) தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை தமிழ் அரசுக் கட்சி பணிமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவரும் திருமலை மாவட்ட எம். பி.யுமான ச. குகதாசன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாநகர சபையில் தமிழ் அரசு கட்சி சார்பில் 9 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பில் 6 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பாக 4 உறுப்பினர்களும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சி மற்றும் இரண்டு சுயேச்சை குழுக்கள் சார்பாக தலா ஓர் உறுப்பினராக மொத்தமாக 25 உறுப்பினர்கள்

11

# வடக்கு, கிழக்கில் படை முகாம்களை அகற்றுவதால் எதிர் பலனே கிட்டும்!

## சரத் பொன்சேகா சொல்கிறார்

- பிரபாகரன் அமைதிக்காகவா போராடினார் என்றும் கேள்வி
- நினைவேந்தல்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது



கொழும்பு, மே 29

வடக்கு, கிழக்கில் முகாம்கள் அகற்றப்படுகின்றன என்றால், அதன் ஊடாக எதிர்மறையான பிரதிபலன்களே கிடைக்கும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

11

# ஜூன் 7ஆம் திகதி ஹஜ் பெருநாள்

கொழும்பு, மே

எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி இஸ்லாமிய மக்களின் ஹஜ் பெருநாள் (தியாக திருநாள்) கொண்டாடப்படும் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

புனித துல் ஹிஜ்ஜஹ் மாதத்துக்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று நடைபெற்றது.

11

# ஒழுக்கமான நாட்டுக்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பேன்!



கொழும்பு, மே 29

ஒழுக்கமான நாட்டை உருவாக்க, அரசாங்கம் என்ற வகையில் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் உரிய வகையில் முன்னெடுப்பேன் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

மேலும், ஒழுக்கவீனத்தின் எல்லைவரை சென்றுகொண்டிருந்த நாட்டை மீண்டும் ஒழுக்க நிலைக்கு கொண்டு செல்வதற்கான வேலைத் திட்டத்தில், மகா சங்கத்தினருக்கு பெரும்

11

# முல்லைத்தீவில் நாளை மறுதினம் கவனவீர்ப்பு!

முல்லைத்தீவு, மே 29

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் நாளை மறுதினம் சனிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதிகோரியே


11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டித் தீர்வுதான் தமிழர் எதிர்பார்ப்பு!

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,மே. 29

"அவுஸ்திரேலிய அரசின் தீர்மானங்களும், இராஜதந்திர அழுத்தங்களும் ஈழத்தமிழர் நலன்சார்ந்து வலுப்பெறவேண்டும்."

-இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.


ஆஸ்திரேலிய தூதுவருடன் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் தொடர்பில் இதன்போது ஆஸ்திரேலியத் தூதுவரிடம் கவனத்துக்கு சிறிதரன் எம்.பி. கொண்டுவந்தார்.

அரசியல் தீர்வு பற்றியும் பேசப்பட்டுள்ளது. சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதற்காக ஆஸ்திரேலியாவின் அழுத்தங்கள் தொடர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

காணிப்பிரச்னை, காணாமல்ஆக்கப்பட்டோர் பிரச்னை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாத தடைச் சட்டம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

(அ)



# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 268 தாதியர்கள் புதிதாக நியமனம்

யாழ்ப்பாணம், மே. 29

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிதாக இரண்டு தாதியப் பரிபாலர்களும் 268 தாதிய உத்தியோகத்தர்களும் நேற்று புதன்கிழமை முதல் நியமனம் பெற்றுள்ளனர்.

தாதிய பரிபாலர்களுக்கான வெற்றிடங்கள் ஐந்து இருக்கின்றபோதும் இரண்டு நியமனங்களே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே சேவையில் உள்ள தாதிய உத்தியோகத்தர்களில் 168 பேர் வருடாந்த இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள நிலையில், புதிதாக வருகை தந்தவர்களில் 60 பேர் தமிழ் மொழி சார்ந்தவர்களாகவும் ஏனைய அனைவரும் சகோதர மொழி பேசுபவர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் போதனா வைத்திய சாலைக்கு நியமனம் பெற்று வந்த 268 புதிய தாதிய உத்தியோகத்தர்களை வரவேற்கும் நிகழ்வு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

(அ)

# கடும் காற்று, கடல் கொந்தளிப்பு தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, மே. 29

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிலாபம் முதல் புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், காலி முதல் புத்தளம் மற்றும் மன்னார் வழியாக அம்பாந்தோட்டை வரையிலும் உள்ள கடற்கரையோரக் கடல் பகுதிகளுக்கே சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேற்று பி.ப. 12.30 மணி முதல் இன்று பி.ப. 12.30 மணி வரை இந்த எச்சரிக்கை அமுலில் இருக்கும் என திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மறுஅறிவித்தல் வரை மீனவர்கள் மற்றும் கடற்சார் ஊழியர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் காரணமாக, சிலாபம் முதல் புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன் துறை வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கடற்கரையோரக் கடல் பகுதிகளுக்கு காற்றின் வேகம் சில நேரங்களில் மணிக்கு 60-70 கி.மீ வரை அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இந்தக் கடல் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிலாபம் முதல் கொழும்பு வழியாக காலி வரையிலும், காங்கேசன் துறை முதல் முல்லைத்தீவு வழியாக திருகோணமலை வரையிலும் உள்ள கடற்கரையோரக் கடல் பகுதிகளுக்கு காற்றின் வேகம் சில மணிக்கு 50-60 கி.மீ வரை அதிகரிக்கக் கூடும் என்றும், அந்தக் கடல் பகுதிகளும் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்தக் கடல் பகுதிகளில் மீனவர்கள் மற்றும் கடற்படை சமூகத்தினர் இது தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ)

# ரவூப் ஹக்கீம், நிஸாம் காரியப்பருக்கு கஜேந்திரகுமார் எம்.பி. நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 29

வடக்கு மாகாண காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற வைப்பதற்காக தமிழ் தரப்புடன் இணைந்து காத்திரமான பங்களிப்பை செய்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி மற்றும் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோருக்கு விசேட நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து பாராளுமன்ற விவாதங்களிலும் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் இவர்கள் துணிச்சலுடன் ஆணித்தரமாகவும் ஆக்கபூர்வமாகவும் கருத்துக்களை முன்வைத்து, அழுத்தம் வழங்கியிருந்தனர் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே ரவூப் ஹக்கீம் மற்றும் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் ஆகியோர் குறித்த வர்த்தமானியை இரத்துச் செய்யும் விவகாரத்தில் வழங்கிய காத்திரமான பங்களிப்பை அவர் பாராட்டினார். (அ)

# நான்கு மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே. 29

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10 மணிக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை இன்று காலை 10 மணி வரை 24 மணி நேரத்திற்கு அமுலில் இருக்கும் என தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, களுத்துறை மாவட்டத்தில் பாலிந்தநுவர, கண்டி மாவட்டத்தில் கங்கை ஹலகோரள மற்றும் பஸ்பகே கோரள ஆகிய பகுதிகளுக்கு நிலை 01 இன் கீழ் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க, புலத்கோஹுபிட்டிய, யட்டியந்தோட்டை மற்றும் ருவன் வெல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# இந்திய சுரங்கத்துறையின் பிரதிநிதிகள் குழு வருகை

## முதலீடுகள் குறித்து ஆராய்வு




கொழும்பு, மே. 29

இந்திய அரசின் சுரங்க அமைச்சு தலைமையிலான பிரதிநிதிகள் குழு சுரங்கங்கள் மற்றும் கனியவளத் துறையில் சாத்தியமான ஒத்துழைப்புகளை ஆராய்வதற்காக இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தியாவின் முன்னணி அரச சுரங்க நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவினர் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியைச் சந்தித்த இப்பிரதிநிதிகள் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உள்ளிட்ட இலங்கை அரசுக்குச் சொந்தமான கனிய வள நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

முதலீட்டு சபை பணிப்பாளர் நாயகம் மற்றும் அரசின் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளுடனும் சந்திப்புகள் இடம்பெற்றிருந்தன.

முதலீடுகள் மற்றும் ஒத்துழைப்பு வாய்ப்புகளை ஆராய்தல், சுரங்க தொழில்நுட்பங்களில் நவீன தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் கனியவளத் துறையில் பெறுமதிசேர் கூட்டு முயற்சிகள் குறித்து கலந்துரையாடுதல் இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இந்திய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை இணையமைச்சர் ஸ்ரீசதீஷ் சந்திர துபே மற்றும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோருக்கு இடையே கனியவளத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து 2025 பெப்ரவரி 15 அன்று புதுடில்லியில் நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் இந்த விஜயம் அமைந்துள்ளது. (அ)

# பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் பட்டியல் விரைவில்!

கொழும்பு, மே. 29

பாதாள உலகத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் பெயர்ப் பட்டியல்கள் எதிர்காலத்தில் அவர்களின் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு வழங்கப்படும் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து நடைபெற்ற கலந்துரையாடலின் போது, பிரதிப் பொலிஸ் மா அதிபர் இவ்வாறு கூறினார்.

சில கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பாதாள உலகத்துடன் தொடர்புகளில் ஈடுபட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.05.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கிடைக்கப்போவது என்ன?

தமிழ்த் தேசிய அரசியலை முன்னிலைப்படுத்தும் எந்தவொரு கட்சியிடமும் தாங்கள் உயர்த்திப் பிடிக்கும் அரசியல் கோஷங்களை அடைவதற்கு நடைமுறை சார்ந்து எந்தவொரு திட்டமும் இல்லை. அடிப்படையில் இது ஒரு வாழையடிவாழை பிரச்னையாகும். இதனை வாக்களிக்கும் மக்கள் உணர்ந்து கொள்வதில்லை. தங்களால் இதனை உணர்ந்து கொள்ள முடியவில்லை என்பதுகூட அவர்களுக்குத் தெரிவதில்லை. இதுதான் சாதாரண மக்களின் பிரச்னை. மறுபுறமாக அரசியல்வாதிகளுக்கு சாதகமான சூழலாகவும் தொடர்ந்தும் சுலோகங்களின் மூலம் மக்களை ஏமாற்றவும் முடிகிறது.

எழுபத்தைந்து வருடங்களாக ஒருசில சுலோகங்களே மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசியத்தின் பெயரால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களை முன்வைப்பதற்கு மாறாக, எதெல்லாம் சாத்தியமில்லையோ - எதை தங்களால் அடையவே முடியாதோ அது பற்றியே பேசுவதுண்டு. எதை வலியுறுத்த வேண்டுமோ அது பற்றிப் பேசுவதில்லை. அதற்கான ஆக்கக்குறைந்த முயற்சிகளைக்கூட முன்னெடுப்பதில்லை.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கிய எஸ். ஜே. வி. செல்வநாயகம் சமஷ்டி பற்றிப் பேசியபோதும் அவருடைய காலத்திலேயே அந்த முயற்சியில் தோல்வியுற்றார். பண்டாரநாயக்கவுடனான பேச்சின்போது சமஷ்டியை பண்டாரநாயக்க நிராகரித்தார். மேலும், அதற்கான மக்கள் ஆணை தனக்கில்லை என்றார். இதனைத் தொடர்ந்தே செல்வநாயகம் தனது சமஷ்டி நிலைப்பாட்டைக் கைவிட்டு பண்டாரநாயக்கவை திருப்திப்படுத்தும் நோக்கில் அவருக்கு ஏற்றவாறு இறங்கிப் போனார்.

இந்த பின்புலத்தில்தான், பண்டா - செல்வா ஒப்பந்தம் பிறந்தது. அதுவும் தோல்வியுற்றது என்பது வேறு கதை. ஆனால், தான் தமிழ் மக்களுக்குக் கூறிய விடயத்தை தன்னால் அடைய முடியாதபோது இறங்கிச் செல்வதையே செல்வநாயகம் தெரிவு செய்தார். ஏனெனில், வேறு எதனையும் அவரால் செய்ய முடியவில்லை என்பதுதான் விடயம். பின்னர், தனிநாடு தொடர்பில் பேசியபோதும் அதனை அடையும் வழிமுறை பற்றி செல்வநாயகம் அறியவில்லை - தமிழ் அரசுக் கட்சியும் அறியவில்லை. சும்மா உச்சரிப்பது என்பதே அவர்களுடைய நிலைப்பாடாக இருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் பிராந்திய அரசியலில் ஏற்பட்ட பதற்றமான அரசியல் சூழலின் விளைவாகவே இலங்கை விடயத்தில் இந்தியா தலையீடு செய்தது. இந்திய தலையீடு என்பது முற்றிலும் அன்றைய உலக அரசியலின் பிரதிபலிப்பு. அப்போதைய, இலங்கை ஆட்சியாளர் கடைப்பிடித்த முரண்பாடான வெளிவிவகார முடிவுகளின் காரணமாகவே இந்திரா காந்தி தலைமையிலான இந்தியா அதிருப்தியுற்றது. இதன் விளைவாகவே ஈழத் தமிழர் பிரச்னையில் இந்தியா தலையீடு செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியது. ஆனால், இந்த விடயத்தால் தமிழ் மக்களுக்கு சாதகமான விடயங்கள் பல நிகழ்ந்தன. ஆனால், அதனை சரியாக - தூரநோக்கோடு கையாளும் ஆற்றலுடன் தமிழ் தலைவர்கள் என்போர் செயல்பட்டிருக்கவில்லை. இதனால், கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலைமையாக இன்றுவரையில் தொடர்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட அரசியல் முன்னெடுப்பு என்பதை ஒரு வரியில் கூறுவதாயின், போகும் வழி தெரியாது அவரவர் விருப்பங்களை கூறிக்கொண்டனர். இப்போதும் கூறிக்கொள்கின்றனர்.

இந்த வரலாற்று அனுபவங்களிலிருந்து தமிழ் அரசியல்வாதிகள் சிந்தித்தால் அவர்களுக்கு முன்னால் ஒரேயொரு தெரிவு மட்டும்தான் இருக்கிறது. அதாவது, மாகாண சபை தவிர வேறு எதுவும் அவர்களுக்கு முன்னால் இல்லை. மாகாண சபைகள் தேர்தலில் தும்புத்தடி ஒன்றை நிறுத்தப் போவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகிறார். ஆனால், எழுபத்தைந்து வருடகாலமாக முன்னெடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய அரசியலால் ஜி. ஜி. பொன்னம்பலம் தொடக்கம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வரையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸால் தமிழ் மக்களுக்காக ஒரு தும்புத்தடியைக்கூட பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்பதுதான் உண்மை. இன்று தமிழரின் அரசியல் எதிர்காலமோ தேய்ந்த தும்புத்தடியுடன் ஒப்பிடக்கூடிய நிலையில்தானே இருக்கிறது.

# ஏற்றுமதித் தொழில்துறையின் சவால்கள் தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, மே. 29

ஏற்றுமதித் தொழில் துறையின் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்களும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்ட இக் கலந்துரையாடலில், உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்தும் அதே வேளை ஏற்றுமதிக்கு முன்னுரிமையளிக்கும் உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிய அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், இதன்போது எழுந்துள்ள சவால்களை வெற்றிகொள்வதற்கு நீண்டகால கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

ஏற்றுமதித் துறையை மேம்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அது தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரசல் அபோன்சு ஆகியோர் உட்பட அரச அதிகாரிகள் பலர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

## ஹெரோயினுடன் முன்னாள் கிரிக்கெட் வீரர் மதுசங்க கைது

கொழும்பு, மே 29

ஹெரோயின் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் செஹான் மதுசங்கவை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குளியாப்பிட்டி நீதிவான் ரன்திக்க லக்மால் ஜயலத் உத்தரவிட்டுள்ளார்.



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் செஹான் மதுசங்கவின் வீட்டில் போதைப் பொருள் இருப்பதாக பன்னல பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. பொலிஸார் நடத்திய சோதனையில் 2 கிராம் 350 மில்லிகிராம் ஹெராயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இதையடுத்து, கைதுசெய்யப்பட்ட செஹான் மதுசங்க குளியாப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னக்கோனுக்கு எதிரான வழக்கு செப். 8இல் விசாரணை

கொழும்பு, மே 29

தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான மனு எதிர்வரும் செப்ரெம்பர் 08ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்குமாறு கோரி நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு ஜனத் டி சில்வா, சோபித ராஜகருணா மற்றும் சம்பத் விஜயரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஹரக் கட்டாவின் வழக்கு ஜூன் 9இல் விசாரணை!

கொழும்பு, மே 29

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்ல முயன்றமை தொடர்பில் பாதாள உலக குழுவை சேர்ந்த 'ஹரக் கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன என்பவர் உட்பட மூவருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூன் 09ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'ஹரக் கட்டா' பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# அரசின் சதியாலேயே கொழும்பு மாநகர முதல்வரின் பெயரை வெளியிடவில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, மே 29

கொழும்பு மாநகர சபையின் முதல்வராக நகர சபையில் பல வருடங்கள் உறுப்பினராக இருந்த ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ஒருவரையே பெயரிடவுள்ளோம். ஆட்சியை கைப்பற்ற அரசாங்கம் மேற்கொண்டுவரும் சதித்திட்டங்கள் காரணமாகவே முதல்வரின் பெயரை வெளியிடாமல் இருக்கிறோம் என்று கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகளின் பிரகாரம் கொழும்பு மாநகர சபையில் ஆட்சி செய்ய எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு அரசாங்கம் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. அதேபோன்று எதிர்க்கட்சியில் அதிக ஆசனங்களை பெற்ற கட்சி என்ற வகையில் நாங்களும் முயற்சித்து வருகிறோம்.

இந்தமுறை தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மொத்தமாக 119 ஆசனங்கள் உள்ளன. இதில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு 48 ஆசனங்கள் கிடைத்துள்ளன. ஆட்சி அமைப்பதற்கு 59 ஆசனங்கள் தேவை.

அதனால், சுயேச்சைகளின் ஆதரவை அரசாங்கம் பெற்று ஆட்சியமைக்கவுள்ளதாகக் கூறுகிறது. அவர்கள் அனைவரின் ஆதரவை பெற்றுக்கொண்டாலும் அரசாங்கத்துக்கு ஆட்சி அமைக்க முடியாது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 29 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 15
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திருதியை




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் பல வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மேலதிகாரிகளிடம் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மதிப்பு உயரும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். மேலதிகாரி உதவுவார்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். எச்சரிக்கையுடன் செயல்படவேண்டிய நாள்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். திறமைகள் வெளிப்படும்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். யோகம் கிட்டும்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும்.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.


**மீனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

# விவசாய ஆராய்ச்சி திணைக்களத்தின் தற்காலிக பணியாளர்கள் போராட்டம்!

## நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி

கிளிநொச்சி, மே. 29

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தை தவிர்ந்த விவசாய திணைக்களத்தின் பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பல வருட காலம் பணிபுரியும் ஊழியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி நேற்று காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.



கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட 75 இற்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரியும் அவர்கள் குறித்த கனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி திணைக் களத்தின் முன்பாக இந்த போராட்டம் இடம்பெற்றது.

கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும் இதுவரை தங்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்கவில்லை என்றும் தங்களது நியமனம் தொடர்பில் அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# ‘க்ரோ’ திட்டத்தின் அறிமுக நிகழ்வு ஆளுநர் தலைமையில் நடந்தது!

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணத்தில் “க்ரோ” திட்டத்தின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

30 இலட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியில், 3 ஆண்டுகளுக்கு முன்னெடுக்கப்படவுள்ள “க்ரோ“ திட்டத்தின் அறிமுக நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்ரீபன்ஸ், இலங்கைக்கான நோர்வேயின் பிரதித் தூதுவர் மார்ரைன் அம்டால் பொத்தெம் ஆகியோரின் பங்கேற்புடன் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் பங்காளர்களாக வடக்கு மாகாண சபையும், சர்வதேச தொழிலாளர் நிறுவனமும் செயல்படவுள்ளன.

அறிமுக நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், வறுமை, போசாக்கின்மை, சூழல் மாற்றங்களால் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் பொருளாதார வலுவூட்டல், சமூக முன்னேற்றம் மற்றும் காலநிலையை எதிர்கொள்ளல் ஆகியன பிரதான செயல்திட்டமாக கொள்ளப்படும். இந்தத் திட்டத்தின் ஊடாக பெண்கள் மற்றும் வலுக்குறைந்தோர் ஆகியோரின் பங்குபற்றல் உறுதி செய்யப்படுவதுடன் அனைவரையும் உள்வாங்கக் கூடிய வேலை வாய்ப்புகளை நிர்ணயிப்பதோடு இயற்கையுடன் இணைந்த காலநிலைக்கு முகம்கொடுக்கக்கூடிய விவசாயம் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு சார்ந்த நடவடிக்கைகள் மாகாண சபையின் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் ஊடாக சர்வதேச தொழிலாளர் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுப்பதன் ஊடாக வடக்கு மாகாண மக்களின் வாழ்வில் ஒரு புதிய மாற்றம் ஏற்பட வழிவகுக்கும் - என்றார்.

(ஐ)

# யாழில் திறக்கப்படவுள்ள கடவுச்சீட்டு பணிமனையை பார்வையிட்ட அமைச்சர்!

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் விரைவில் அமையவுள்ள கடவுச்சீட்டு பணிமனையை கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் பார்வையிட்டுள்ளார்.

இதன்போது மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் உடனிருந்தார்.

இதுவரை நடைபெற்ற வேலைகளின் முன்னேற்றம் குறித்து பதில் அரசாங்க அதிபரிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

மேலும், கடவுச்சீட்டு பெற வரும் பொதுமக்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் அமைக்கப்படவுள்ள கொட்டகை மற்றும் கடவுச்சீட்டு பணிமனையில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் குறித்தும் இதன்போது அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

(ஐ)

# மாற்றுத்திறனாளிகளுக்கு கிளிநொச்சியில் பயிற்சி!

கிளிநொச்சி, மே 29

மாற்றுத்திறனாளிகளின் சுயதொழிலை மேம்படுத்துவது தொடர்பான பயிற்சி பட்டறை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மாற்றுத் திறனாளிகளின் சுயதொழில் உற்பத்திகளை அதிகரித்தல், அவற்றுக்கான தரத்தை உயர்த்துதல், உரிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன.

இந்த பயிற்சி பட்டறையில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளை சேர்ந்த சுயதொழில் ஈடுபடும் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்றனர். இதன்போது, அவர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் தெரிவித்தனர்.

(ஐ)

# நெடுந்தூர பஸ் நிலையம் சிறீதரன் எம். பிக்கு மகஜர்!

யாழ்ப்பாணம், மே 29

நெடுந்தூர சேவைகளுக்காக, யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம், மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் உள்ள, வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட தூர சேவை பேருந்து உரிமையாளர்களின் பணிமனையில் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலை தொடர்ந்தே இந்த மனு கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில், நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் இருக்கும், தனியார், இலங்கை போக்குவரத்து சபையின் நெடுந்தூர போக்குவரத்து சேவை தொடர்பான பிரச்னைக்கு, விரைவில் தீர்வு பெற்றுத் தருமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மீண்டும் அரிசி தட்டுப்பாடு!

கொழும்பு, மே. 29

இலங்கையில் அரிசிக்கு தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெரும் போகத்தின் போது அரசாங்கம் நெல் கொள்வனவு செய்வதில் தோல்வி அடைந்துள்ளது எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் தற்போது சந்தையில் கீரிச் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சம்பா மற்றும் நாடு ஆகிய அரிசி வகைகள் கட்டுப் பாட்டு விலையை மீறி விற் பனை செய்யப்படுவதாக தெரி விக்கப்படுகிறது.

இதனால் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த பெரும் போகத்தின் போது அரசாங்கத்தின் உத்தரவாத விலையை மீறி தனியார் துறையினர் கூடுதல் விலைக்கு நெல் கொள்வனவு செய்திருந்தனர்.



இவ்வாறே கூடுதல் விலைக்கு நெல் கொள்வனவு செய்ததன் காரணமாக குறைந்த விலைக்கு அரிசி விற்பனை செய்ய முடியாது என தெரி விக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்த விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தையில் அரிசி விற்பனை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தவறி உள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்து விரைவில் அரசாங்கம் வர்த்தமானி ஒன்றை வெளியிடும் என அனுராத தென்னக்கோன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

# சபைகளில் பலவந்தமாக ஆட்சியமைக்க முயற்சி!

## அரசை சாடும் ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, மே. 29

**இலங்கை மின்சார சபை மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனையை முன்வைத்துள்ளது. மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் நெக்ஸ்ட் ஆடை தொழிற்சாலையைப் போன்று இன்னும் எத்தனை தொழிற்சாலைகள் மூடப்படும்? பிரதான பிரச்னைகளுக்கு தீர்வு வழங்குவதை விடுத்து உள்ளூராட்சிமன்றங்களில் பலவந்தமாக ஆட்சியமைப்பதிலேயே அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் மீண்டும் பாரியதொரு மின் கட்டண அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று பல மாதங்களுக்கு முன்னரே நாம் தெரிவித்திருந்தோம்.

மின் சக்தி அமைச்சர் உட்பட முழு அரசாங்கமும் அதனை மறுத்தது. ஆனால் கடந்த வாரம் 18.3 வீதத்தினால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை மின்சார சபையால் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நெக்ஸ்ட் ஆடை தொழிற்சாலை மூடப்பட்டது. இந்நிலையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் இதேபோன்று இன்னும் எத்தனை தொழிற்சாலைகள் மூடப்படும்?

விரைவில் நாடு எதிர்கொள்ளவிருக்கும் இந்த சவால்களுக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து எந்த பதிலும் இல்லை. தற்போது சகல அமைச்சுக்களிலும் அரச சேவைகள் சீர்குலைந்துள்ளன.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் போக்குவரத்து அமைச்சு சார் ஊழியர்கள் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பிரச்னைகளுக்கு தீர்வினை வழங்காமல் உள்ளூராட்சிமன்றங்களில் எவ்வாறு பலவந்தமாக ஆட்சியமைப்பது என்பதிலேயே அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது.

அரசாங்கம் பெரும்பான்மையைப் பெற் றுள்ள சபைகளில் ஆட்சிய மைப்பதில் நாம் எந்த இடையூ றுகளையும் விளைவிக்கப் போவதில்லை. அதேபோன்று எதிர்க்கட்சிகள் பெரும் பான்மை பெற்றுள்ள சபைகளில் ஆட்சிய மைப்பதற்கு அரசாங்கம் எமக்கு இடமளிக்கவேண்டும் -என் றார். (அ)

# கோட்டாபய ஆட்சியில் சீனி மோசடி அநுர அரசாங்கத்தில் உப்பு மோசடி!

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 29

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெற்ற வெள்ளை சீனி மோசடியைப் போன்று தற்போது உப்பு மோசடி இடம்பெறுகிறது. 24 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உப்புக்கு 40 ரூபா வரி அறவிடப்படுகிறது. அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு வற் வரியை நீக்குவதாகக் கூறிய அரசாங்கமே தற்போது இவ்வாறானதொரு மோசடியில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உப்பு தட்டுப்பாடு ஏற்படவுள்ளமை தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னரே அரசாங்கம் அறிந்திருந்தது. அது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை என அரசாங்கத்தால் கூறமுடியாது. மழை காரணமாக உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுவது பொய்யாகும். இதற்கு முன்னர் இருந்த ஆட்சியில் மழை பெய்யவில்லையா? மழை பெய்வதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வேண்டுமா?

தமது இயலாமையை மறைப்பதற்கு இயற்கையின் மீதும் பழி சுமத்துகின்றனர். சுனாமி ஆழிப் பேரலையால் பாரதூரமான அழிவுகள் ஏற்பட்டபோதும் கூட வெளிநாடுகளிலிருந்து உப்பு இறக்குமதி செய்யப்படவில்லை. அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் உப்பு இறக்குமதி செய்யப்பட்டு, அவற்றை சந்தைகளில் விநியோகிப்பதற்காக தனியார் நிறுவனத்திடம் வழங்கப்பட்டன.

அந்த நிறுவனங்களால் ஒரு கிலோ உப்பு 350 - 400 ரூபாவுக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் உப்பு ஒரு கிலோ 130 ரூபாவாகக் காணப்பட்டது. இந்தியாவிலிருந்து ஒரு மெற்றிக் தொன் உப்பு 80 டொலருக்கு இறக்குமதி செய்யப்பட்டது. அவ்வாறெனில் ஒரு கிலோ உப்பு இலங்கை விலைப்படி 24 ரூபாவாகும். ஆனால் ஒரு கிலோ உப்புக்கு 40 ரூபா இறக்குமதி வரி அறவிடப்படுகிறது.

இறக்குமதி செலவை விட இரு மடங்குக்கும் அதிகமாக வரி அறவிடப்படுகிறது. போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளை உள்ளடங்கினாலும் ஒரு கிலோ உப்பினை ஆகக் குறைந்தது 100 ரூபாவுக்கு வழங்க முடியும். ஆனால் சந்தைகளில் 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசாங்கம் இறக்குமதி செய்து தனியார் கம்பனிகளுக்கு வழங்குகிறது. தனியார் கம்பனிகள் அவற்றை 350 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றன.-என்றார். (அ)

# கடவுச்சீட்டு வழங்கலில் மோசடி உடனடி விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே. 29

கடந்த காலங்களில் சட்ட விரோதமாக கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களம் மேற்கொண்டு வருவதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கடந்த காலங்களில் சட்டவிரோதமான முறையில் பல்வேறு நபர்களுக்கு கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வெளிநாட்டில் இருக்கும் கெஹெல்பத்தர பத்மே என்ற குற்றவாளிக்கு போலி கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வு உதவி கட்டுப்பாட்டாளர் உட்பட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிமல் ரத்நாயக்காவைக் கைது செய்து ரணிலின் சாதனையை முறியடியுங்கள்!

## அநுரவுக்கு கம்மன்பில சவால்



கொழும்பு, மே. 29

சட்டவிரோத செயலில் ஈடுபட்ட அமைச்சர் பிமல் ரத்நாயக்கவை கைது செய்து, ரணில் விக்ரமசிங்கவின் சாதனையை முறியடியுங்கள் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சவால் விடுத்துள்ளார்.

துறைமுக கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

பரிசோதனையின்றி விடுவிககப்பட்ட 323 கொள்கலன்களுக்கும், மனித படுகொலைகளுக்கும் நேரடி தொடர்புண்டு என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பரிசோதனைகள் ஏதுமின்றி 2025.01.18 ஆம் திகதி சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாகவும், அந்த கொள்கலன்களில் இருந்த பொருட்கள் என்னவென்பதை உரிய தரப்பினர் வெளிப்படுத்தவில்லை என்றும் சுங்க திணைக்கள சேவை சங்கம் குறிப்பிட்டது.

இந்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு தான் உத்தரவு பிறப்பித்ததாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார். பிமல் ரத்நாயக்க கப்பற்றுறை அமைச்சராக இருக்கலாம், ஆனால் சுங்கத் திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு கிடையாது.

கொள்கலன் நெரிசலுக்கு தீர்வு தொடர்பான பரிந்துரைகளை மாத்திரம் அமைச்சரவைக்கு முன்வைக்க இந்த உப குழுவுக்கு பணிக்கப்பட்டிருந்தது.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் என்னவிருந்தது என்பதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக சுங்கத் திணைக்களத்திடம் 2025.02.28 ஆம் திகதியன்று கோரியிருந்தேன். இந்த கேள்விகளுக்கு சுங்கத் திணைக்களத்தின் பதில்கள் பூரணமாக இருக்கவில்லை.

கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் 2025.01.29 ஆம் திகதியன்று வெளியிட்ட ஊடக அறிக்கையை சுங்கத் திணைக்களம் இணைத்துள்ளது.

இந்த கொள்கலன்களில் என்னவிருந்தது என்பதை வெளிப்படுத்த அரசாங்கம் ஏன் இன்றும் பின்வாங்குகிறது.

இந்த கொள்கலன்களில் ஆயுதம் மற்றும் ஆயுத இணைப்பு கருவிகள் இருக்கலாம் என்ற பாரியதொரு சந்தேகம் எமக்கு காணப்படுகிறது.

கடந்த நான்கு மாத காலப் பகுதியில் சமூக கட்டமைப்பில் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களுக்கும், மனித படுகொலைகளுக்கும் நேரடி தொடர்புண்டு என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலை முடிந்தால் நடத்திக் காட்டுக!

**அரசுக்கு பொதுஜன பெரமுன சவால்**

கொழும்பு, மே. 29

**முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்திக் காட்டுமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, பொதுஜன பெரமுன கட்சி சவால் விடுத்துள்ளது.**

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே முன்னாள் ஆளுநர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன இந்த சவாலை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் அதன் வாக்கு வங்கி சரிந்துவருகின்றது. முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு சவால் விடுக்கின்றோம்.

வடக்கில் நினைவேந்தல் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொழும்பில்கூட நடத்தப்பட்டுள்ளது. ஆனால் படையினருக்குரிய கௌரவத்தை இந்த ஆட்சியாளர்கள் வழங்கவில்லை.

நாம் தமிழர்களுக்கு எதிராக போர் செய்யவில்லை. நாட்டு மக்களுக்கு வாழ்வதற்குரிய சூழ்நிலை இருக்கவில்லை. எனவே, மக்களை பாதுகாப்பதற்காகவே போர் செய்யப்பட்டு, சுதந்திரம் பெறப்பட்டது. இந்நிலைமையை அரசாங்கம் சீர்குலைக்க கூடாது.

பொய்களை சமூகமயப்படுத்தியதால் ஏற்படும் பிரதிபலன்களை இந்த அரசாங்கம் விரைவில் உணரும்-என்றார். (அ)

## பாதசாரி கடவையில் மின் விளக்கு பொருத்தும் திட்டம் ஆரம்பமானது

கொழும்பு, மே. 29

பாதசாரிக் கடவைகளில் மின் விளக்குகளை பொருத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

இதன் முதற்கட்டமாக அடையாளம் காணப்பட்ட ஆபத்தான இடங்களில் அமைந்துள்ள பாதசாரிக் கடவைகளுக்காக மின் விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் கே.சந்திரகுமார தெரிவித்தார்.

இதற்காக சூரிய மின்கலங்களைப் பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

இதனூடாக இரவு நேரங்களில் பாதசாரி கடவைகளில் பயணிப்பவர்களை சாரதிக்கு தெளிவாக அடையாளம் காண முடியும் என்பதுடன் இதனூடாக ஏற்படும் விபத்துகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என கே. சந்திரகுமார குறிப்பிட்டார்.

இதுவரை குருநாகல், காலி மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அவ்வாறான 140 பாதசாரி கடவைகளில் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

பாதசாரிக் கடவைகளில் இடம்பெறும் விபத்துகளால் வருடாந்தம் அதிகளவானோர் உயிரிழக்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## மகசின் சிறையில் துமிந்த திஸநாயக்க

கொழும்பு, மே. 29

விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவின் படி சிகிச்சைகளுக்காக அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

துமிந்த திஸாநாயக்க விசேட வைத்தியர் ஒருவரால் பரிசோத னைக்குட்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

வெள்ளவத்தை அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியில் தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

## நிறைவுகாண் மருத்துவ நிபுணர்கள் சங்க பணிப் புறக்கணிப்பு தற்காலிக நிறுத்தம்

கொழும்பு, மே. 29

நிறைவுகாண் மருத்துவ நிபுணர்கள் சங்கங்களினது ஒன்றியத்தின் 2 சங்கங்களால் நேற்று ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு நேற்று காலை 8 மணிக்குத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

சுகாதார சேவையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக எழுந்துள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சுகாதார அதிகாரிகள் தலையிடத் தவறியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று முன் தினம் காலை 8 மணிக்கு இந்தப் பணிப்புறக்கணிப்பு ஆரம்பமானது.

நிறைவுகாண் மருத்து சேவையின் ஆய்வுகூட நிபுணர்கள் மற்றும் உடலியக்க நிபுணர்கள் சங்கத்தினர் குறித்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில், தங்களது கோரிக்கைகள் தீர்க்கப்படாவிட்டால், அடுத்த வாரம் முதல் அனைத்து நிறைவு காண் மருத்துவ நிபுணர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவார்கள் என நிறைவுகாண் மருத்துவ நிபுணர்கள் சங்கங்களின் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.



எவ்வாறாயினும், மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன் தினம் பிறப்பித்த உத்தரவுக்கமைய, மருத்துவ ஆய்வு கூடம் மற்றும் உடலியக்கம் ஆகிய துறைகளுக்கான பயிற்சி நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. (அ)

## குடிவரவுத் திணைக்களத்தின் உதவி கட்டுப்பாட்டாளர் கைது

கொழும்பு, மே. 29

வெளிநாட்டில் உள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கெஹெல்பத்தர பத்மே என்பவருக்கு போலி கடவுச் சீட்டை தயாரித்து வழங்கியமை தொடர்பில் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் உதவி கட்டுப்பாட்டாளர் ஒரு வர் சந்தேகத்தின் அடிப்படை யில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைவிரல் அடையாளம் இன்றி கெஹெல்பத்தர பத்மேவின் கடவுச்சீட்டை குறித்த அதிகாரியே தயாரித்து வழங்கியிருக்கலாமென குற்றப்புலனாய்வுத் திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

கெஹெல்பத்தர பத்மே என்பவருக்கு போலி கடவுச் சீட்டை தயாரிக்க முயன்ற 2 சந்தேகநபர்கள் இதற்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த இருவரும் கடவுச் சீட்டை தயாரிப்பதற்காக கெஹெல்பத்தர பத்மே என்பவரின் நிழற்படங்களை வட்ஸ் அப் ஊடாக பெற்று அதனை வடிவமைத்து குடிவரவு - குடியல்வுத் திணைக்களத்தில் சமர்ப்பித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு 2014ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டின் ஊடாக கெஹெல்பத்தர பத்மே 2021ஆம் ஆண்டு வெளிநாடு சென்றுள்ளார்.

அத்துடன் குறித்த கடவுச் சீட்டானது கடந்த வருடத்துடன் காலாவதியாகியுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர கெஹெல்பத்தர பத்மேவின் நிழற்படத்தை பயன்படுத்தி இரண்டு வெவ்வேறு பெயர்களில் மேலும் 2 போலி கடவுச்சீட்டுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளப்பட்டுள்ளமை இது வரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## இலங்கை வந்தார் போலந்து அமைச்சர்



கொழும்பு, மே. 29

போலந்து குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ரெடொஸ்லாவ் சிகோர்ஸ்கி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று புதன்கிழமை இலங்கை வந்தடைந்தார்.

அவரை பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமச்சந்திர வரவேற்றார்.

அமைச்சர் சிகோர்ஸ்கி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் இரு தரப்பு கலந்துரையாடல்கள் உட்பட உயர் மட்ட சந்திப்புகளில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## 4 மாதங்களில் ஆடை ஏற்றுமதியில் 1.66 பில்லியன் டொலர் வருமானம்!

கொழும்பு, மே. 29

ஜனவரி முதல் ஏப்ரல் 2025 வரை, மொத்த ஆடை ஏற்றுமதி 1.66 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதென கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் தகவல் வெளியிட்டுள்ளது.

கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் இது குறித்து மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

ஏப்ரல் 2025 இல் இலங்கையின் ஆடை ஏற்றுமதி வலுவான செயல்திறனை பதிவு செய்துள்ளது. மொத்த ஏற்றுமதிகள் கடந்த ஆண்டு அதே மாதத்துடன் ஒப்பிடும்போது 15.14 வீதம் அதிகரித்துள்ளன.

இந்த வளர்ச்சிக்கு அமெரிக்கா (6.83 வீத அதிகரிப்பு), ஐரோப்பிய ஒன்றியம் ( ஐக்கிய இராச்சியம் தவிர) (27.04 வீத அதிகரிப்பு), மற்றும் ஐக்கிய இராச்சியம் (7.45 வீத அதிகரிப்பு) உள்ளிட்ட முக்கிய சந்தைகளில் இருந்து வந்த உறுதியான தேவை காரணமாகும். பிற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளும் 21.18 வீதம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனவரி முதல் ஏப்ரல் 2025 வரை, மொத்த ஆடை ஏற்றுமதி 1.66 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தை விட 12.4 வீதம் அதிகரிப்பைக் காட்டுகிறது.குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி 18.13 வீதம், அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 10.06 வீதம், மற்றும் பிற சந்தைகளுக்கான ஏற்றுமதி 13.56 வீதம் அதிகரித்துள்ளன.

அதே நேரத்தில், இங்கிலாந்து சந்தை 6.26 வீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த முடிவுகள் தற்போதைய உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் ஆடைத் துறையின் தாங்கும் திறனையும், தொடர்ச்சியான போட்டித்தன்மையையும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

இந்த முடிவுகள், உலகளாவிய சவால்கள் நீடிக்கும் இந்தக் காலகட்டத்திலும் இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் உறுதிப்பாடு மற்றும் போட்டித்தன்மையை ஏற்பட்டுள்ளது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன- என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள்மீது சித்திரவதை இனியும் இடமளிக்கக்கூடாது!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, மே. 29

**பாடசாலைகளுக்குள் பிள்ளைகள் முகம்கொடுக்கும் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், பாடசாலை மாணவர்களுக்கு எதிரான சித்திரவதைகளுக்கு இனியும் இடமளிக்கக்கூடாதெனவும், அவ்வாறான சம்பவமொன்று இடம்பெறுமாயின் உடனடியாக அதிபர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

கல்வியமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோதே பிரதமர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பிள்ளைகள் ஒரு அரசின் அடிப்படை பொறுப்பாகும்.

இலங்கை, ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளதன் ஊடாக சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கும், அவர்களின் உச்சகட்ட நலனிற்காக செயற்படுவதற்கும் கடமைப்பட்டுள்ளது.

இதனூடாக குறித்த பொறுப்பு அரசுக்கும், பாடசாலைக் கட்டமைப்புக்கு பொறுப்பாக செயற்படும் அரச பிரதிநிதிகளான அனைத்து அதிகாரிகளுக்கும் உள்ளது.

அண்மைக்காலமாக பதிவாகும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களை கண்ணோக்கும்போது, பாடசாலை கட்டமைப்புக்குள் சிறுவர்கள் முகம்கொடுக்க நேரிட்டுள்ள துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

எனினும் வீடு உட்பட பாடசாலையும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான மற்றும் பொருத்தமான சூழலாக அமைய வேண்டும்.

பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர்.

இதனால் பாடசாலை சூழல் பிள்ளைகளுக்கு பாதுகாப்பற்ற சூழலாக மாறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

பாடசாலை கட்டமைப்பிற்குள் பிள்ளைகளுக்கு எதிராக இடம்பெறும் எந்த வகையிலான சித்திரவதையும் தொடர்ந்தும் இடம்பெறக்கூடாது.

பாடசாலைக்குள் பிள்ளை முகம்கொடுக்கும் உடல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், வேறு வகையிலான புறக்கணிப்பு, உள ரீதியான துஷ்பிரயோகம் என எதுவாக இருந்தாலும் அதனை மறைத்து அல்லது புறக்கணிப்பு செய்வதை மேற்கொள்ளக் கூடாது.

அது மறைப்பதற்கு அல்லது புறக்கணிப்பதற்கான விடயம் அல்ல.

பாடசாலையின் பிரதான அதிகாரம்மிக்க நபராக பாடசாலை அதிபரினால் அவை குறித்து துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறான செயற்பாடுகளை அலட்சியப்படுத்துவது முழு பாடசாலை கட்டமைப்பும் தோல்வியடைவதற்கு காரணமாக அமைகிறது.

அவ்வா றான சந்தர்ப்பங்களில் மிக விரைவாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# தெற்கில் இரண்டு படகுகளிலிருந்து 450 கிலோ போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, மே. 29

இலங்கையின் தெற்கு கடற்கரையிலிருந்து ஆழ்கடலில் நடத்தப்பட்ட கூட்டு நடவடிக்கையில், பெருமளவிலான போதைப்பொருட்களை ஏற்றிச் சென்ற இரண்டு பல நாள் மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த படகுகளில் இருந்து ஹெராயின் மற்றும் மெத்தம்பேட்டமைன் உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையின் தகவல்களுக்கு அமைவாக கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் மொத்த எடை சுமார் 450 கிலோ கிராம் ஆகும்.

இந்த சம்பவம் தொடர்பாக மொத்தம் 11 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மாத்தறை, தேவேந்திரமுனை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கடற்படையினர் கூறியுள்ளனர்.

இலங்கை கடற்படையின் கூற்றுப்படி, இந்த நடவடிக்கையை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகம் இணைந்து மேற்கொண்டன.

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த நியூசிலாந்து உயர்மட்ட தூதுக்குழு

கொழும்பு, மே. 29

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அரசாங்கத்தின் பிரதிப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸ் மற்றும் நியூசிலாந்து உயர்மட்ட தூதுக்குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நியூசிலாந்து பிரதிப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றடர்ஸ், பிரதி அமைச்சரும், வெளிவிவகார அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகருமான மைக்கல் ஆப்பிள்டன், பிரதி பிரதமரின் பணியாளர் குழாம் பிரதானி கலாநிதி ஜான் ஜோஹன்சன், நியூசிலாந்து வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா பிரிவுகளுக்கான முகாமையாளர் ஜோனா கெம்ப்கர்ஸ், இலங்கைக்கான

நியூசிலாந்து தூதுவர் மைக்கல் எட்வேட் அபல்டன் மற்றும் இலங்கைக்கான நியூசிலாந்து பிரதி தூதுவர் கப்ரியல் ஐசக் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

நமது நாடு தற்போது எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான ஆதரவை பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர், நியூசிலாந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

வர்த்தகம், முதலீடு, தொழிற்கல்வி, மூன்றாம் நிலை கல்வி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மையின் கீழ் ஈடுபாடு உள்ளிட்ட பல முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையை தன்னிறைவு பெற்ற பால் உற்பத்தி நாடாக மாற்றுவதற்காக 2013 ஆம் ஆண்டு கைச்சாதிடப்பட்ட பால் கூட்டுறவு ஒப்பந்தத்தை விரிவாக்குவது தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் நியூசிலாந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# லைபீரியக் கப்பலின் விபத்து இலங்கையையும் பாதிக்கலாம்

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

கொழும்பு, மே. 29

தென்னிந்திய மாநிலமான கேரளாவுக்கு அருகே அரபிக் கடலில் எண்ணெய் மற்றும் ஆபத்தான பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பலொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானமையினால், இலங்கையும் பாதிக்கப்படக்கூடும் என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இருப்பினும், சம்பவத்துக்குப் பிறகு கப்பலிலிருந்த பொருட்கள் இலங்கையில் கரை ஒதுங்கியதாக இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என, அந்த அதிகார சபையின் தலைவர் சமந்த குணசேகர தெரிவித்தார்.

லைபீரிய கொடியுடன் கூடிய குறித்த கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதுடன், அதன் பின்னர் அதன் பணியாளர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

எனினும், கப்பலிலிருந்த 640 கொள்கலன்களில் சுமார் 30 கொள்கலன்கள் இந்தியக் கடற்பரப்பில் கரையொதுங்கியதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அதன்படி, சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை வெளியேற்றவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கப்பலிலிருந்து எரிபொருள் கசிவு ஏற்பட்டதால், எண்ணெய் படலம் கேரள கடற்கரையில் எந்த இடத்தையும் அடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரயில் சாரதிகளிடம் விசாரணை!

கொழும்பு, மே. 29

சுமார் 20 ரயில் சாரதிகள் பணிக்கு சமூகமளிக்காதமை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்த சாரதிகள் குழு பணிக்கு வராததால் அண்மையில் பல ரயில்கள் இரத்து செய்யப்பட வேண்டியிருந்தது என்றும் அவர் கூறினார்.

ரயிலை இயக்க சுமார் 430 சாரதிகள் இருக்கவேண்டும், ஆனால் தற்போது 275 சாரதிகள் மட்டுமே உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரயில் சாரதிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், வரும் ஜூலை மாதம் போட்டி ஆட்சேர்ப்பு தேர்வை நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# நாரஹேன்பிட்டி சூடு: மூன்று பேர் சிக்கினர்

கொழும்பு, மே. 29

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் நிர்வாக பணிப்பாளர் துசித ஹல்லோலுவவின் ஜீப் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மற்றும் சம்பவத்திற்கு உதவிய மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் வத்தளை மற்றும் கிருலப்பனை பகுதிகளில் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் வைத்திருந்த 04 கையடக்கத் தொலைபேசிகளை கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் கையகப்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 31, 32 மற்றும் 40 வயதான வத்தளை மற்றும் கொழும்பு 14 பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. நாரஹேன்பிட்டி பொலிஸார் மற்றும் கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மோட்டார் சைக்கிளை ஒற்றைச் சக்கரத்தில் செலுத்தி சாகசம் காட்டியவருக்கு அபராதம்!

கொழும்பு, மே. 28

வீதியின் முன் சக்கரத்தை உயர்த்தி மோட்டார் சைக்கிளை ஒற்றை சக்கரத்தில் ஓட்டிய ஒரு இளைஞனுக்கு ரூ.55,000 அபராதம் விதிக்கப்பட்டதுடன், குளியாப்பிட்டி நீதிபதி ரந்திகா லக்மல் ஜெயலத் கடுமையாக கண்டித்தார்.

பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தல், காலாவதியான சாரதி உரிமத்தை வைத்திருந்தல், நம்பர் பிளேட்டுகள் மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகள் சரியாக பொருத்தப்படாமல் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்தல் உள்ளிட்ட ஐந்து பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

குளியாப்பிட்டியில் உள்ள கனதுல்ல பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரான தசுன் ஷெவந்தா குற்றச்சாட்டுகளை ஒப்புக கொண்டார். சந்தேக நபர் தனது மோட் டார் சைக்கிளை ஒற்றைச் சக் கரத்தில் தாறுமாறாக ஓட்டிச் சென்று பொதுமக்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துவதாக தலைமையக பொலிஸ் அதிகாரி கமல் ரத்நாயக்க நீதிமன்றத்தில் தெரிவித்தார். (அ)

# 416 குடும்பங்களைச் சேர்ந்த 1,520 பேர் சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்பு!

கொழும்பு, மே. 29

நாடு முழுவதும் தொடரும் சீரற்ற வானிலையால் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 416 குடும்பங்களைச் சேர்ந்த 1,520 நபர்கள் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 08 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

4 வீடுகள் முழுமையாகவும், 321 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

நாடு முழுவதும் தொடரும் சீரற்ற வானிலையால் புத்தளம், யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களே பாதிக்கப்பட்டுள்ளன. (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



திருகோணமலை உள்ளூராட்சிகளில்

# தமிழ் அரசு, மு. கா. இணைந்து ஆட்சியமைக்க புரிந்துணர்வு!



**திருகோணமலை, மே 29**

**திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், குச்சவெளி பிரதேச சபைகளில் இலங்கை தமிழ் அரசு கட்சி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன இணைந்து ஆட்சி அமைப்பதற்கு பல நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்தானது.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பணிமனையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதில், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அந்தக் கட்சியின் திருகோணமலை தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். எஸ். தௌபீக், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பாக திருகோணமலை மாவட்ட குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த ஒப்பந்தத்தில் மூதூர், குச்சவெளி பிரதேச சபைகள் ஆகியவற்றில் இரு கட்சிகளும் தலா இரண்டு வருடங்களை பகிர்ந்து கொள்வதெனவும் மூதூர் பிரதேச சபையில் முதல் இரண்டு வருடங்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியை வழங்குவது எனவும் இறுதி இரண்டு வருடங்களுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியையும் வழங்குவது என இணங்கினர்.

இதேபோன்று குச்சவெளி பிரதேச சபையில் முதல் இரண்டு வருடங்கள் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியை வழங்குவது எனவும் இறுதி இரண்டு வருடங்களுக்கு தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியையும் வழங்குவது எனவும் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இதைவிட திருகோணமலை மாநகர சபை, நகரமும் சூழலும் பிரதேச சபை மற்றும் தம்பலகாமம் பிரதேச சபை ஆகியவற்றில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கவும் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)





# அம்பாறை ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது!

அக்கரைப்பற்று, மே 29

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அம்பாறை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. அத்துடன், மாவட்டத்தின் முக்கிய பிரச்னைகள் தொடர்பிலும் பேசப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண ஆளுநர் உட்பட கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், முப்படையினர், திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# மட்டு. மாநகரில் டெங்கு ஒழிப்பு; 1,500 இடங்கள் தரிசிக்கப்பட்டன!

மட்டக்களப்பு, மே 29

மட்டக்களப்பு மாநகரில் கடந்த 3 நாட்கள் டெங்கு ஒழிப்பு செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, ஆயிரத்து 500 இடங்கள் தரிசிக்கப்பட்டன. இதில் 26 இடங்களில் நுளம்பு குடம்பிகள் கண்டறியப்பட்டன. அத்துடன், இருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் இ. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். முரளீஸ்வரனின் வழிகாட்டலில் இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேநேரம், பல அரச நிறுவனங்களில் டெங்கு பெருகும் சூழல் காணப்பட்டதாகவும் அவை உடனடியாக சீர்செய்யப்பட்டன எனவும் மருத்துவர் உதயகுமார் குறிப்பிட்டார்.

இதேவேளை, மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சில இடங்களில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மு. காவுடன் இணைந்து ஆட்சி; தமிழ் அரசு கட்சிக்குள் எதிர்ப்பு

திருகோணமலை, மே 29

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து குச்சவெளி பிரதேச சபையில் ஆட்சி அமைப்பதற்கு தமிழ் அரசுக் கட்சியின் 3 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால், குச்சவெளி பிரதேச சபையில் இரு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

திருமலையில் மூதூர், குச்சவெளி பிரதேச சபைகளில் தமிழ் அரசு, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகள் இணைந்து ஆட்சி அமைப்பதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்தானது.

இதன்படி, குச்சவெளி பிரதேச சபையில் முதல் 2 வருடங்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியும் தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த ஒருவருக்கு உபதவிசாளர் பதவியையும் வழங்குவது என்று இணக்கம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே, முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைக்கப் போவதில்லை என்று குச்சவெளி பிரதேச சபைக்கு தெரிவான 3 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இவர்கள் மூவரும் ஒப்பந்தம் கைச்சாத்தான நிகழ்விலும் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விபத்தில் முதியவர் பலி

மட்டக்களப்பு, மே 29

வாழைச்சேனை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சுங்கான்கேணியை சேர்ந்த 85 வயதான ஒருவரே விபத்தில் உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதியை கைது செய்வதற்கான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருக்கோவிலில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

திருக்கோவில், மே 29

தமக்கு நீதி கோரி அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் திருக்கோவிலில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவி த. செல்வராணி தலைமையில் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவனவீர்ப்பின்போது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் நீதி கோரிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (ஐ)




# உகந்தைமலை முருகனுக்கு ஜூலை 25 கொடியேற்றம்!

மட்டக்களப்பு, மே 29

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்த மலை சிறீ முருகன் ஆலய கொடியேற்றம் எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி ஆலயபிரதம குருக்கள் சிவசிறீ க. கு. சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக16 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று ஓகஸ்ட் 12ஆம் திகதி சமுத்திர தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

திருவிழா காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் இஸ்ரேல் அரசாங்கம் போர் குற்றங்களை இழைக்கிறது

## அந்த நாட்டின் முன்னாள் பிரதமர்

டெல்அவிவ், மே 29

**"காஸாவில் நாம் நடத்துவது ஓர் அழிவுகரமான போர். சாதாரண மக்கள் கண்மூடித்தனமாக, கட்டுப்பாடுகள் இல்லாமல், கொடூரமான முறையில் கொல்லப்படுகிறார்கள். இதற்கு ஒரு சில வீரர்களின் நடத்தை காரணமல்ல. இது வேண்டுமென்றே - தெரிந்தே - தீங்கிழைக்கும் நோக்கத்துடன் பொறுப்பு இல்லாமல் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கையின் விளைவாகும். ஆம், இஸ்ரேல் போர் குற்றங்களை இழைக்கிறது", - இவ்வாறு இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் எஹுட் ஓல்மெர்ட் தெரிவித்துள்ளார்.**



இஸ்ரேலின் "ஹாரெட்ஸ்" பத்திரிகையில் அவர் எழுதியுள்ள கட்டுரையிலேயே பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசாங்கத்தை அவர் இவ்வாறு கடுமையாக விமர்சித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இஸ்ரேலுக்கு எதிராக சுமத்தப்பட்ட இனப்படுகொலை, போர் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை கடந்த ஒரு வருடமாக நான் பகிரங்கமாக மறுத்து வந்தேன். ஆனால், கடந்த சில வாரங்களாக நடந்து வரும் கொலைகள் பசி பட்டினி எனது பார்வையை மாற்றியுள்ளன.

"காஸாவில் நாம் நடத்துவது ஓர் அழிவுகரமான போர். சாதாரண மக்கள் கண்மூடித்தனமாக - கட்டுப்பாடுகள் இல்லாமல் - கொடூரமான முறையில் கொல்லப்படுகிறார்கள். இதற்கு ஒரு சில வீரர்களின் நடத்தை காரணமல்ல. இது வேண்டுமென்றே - தெரிந்தே - தீங்கிழைக்கும் நோக்கத்துடன் பொறுப்பு இல்லாமல் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கையின் விளைவாகும். ஆம், இஸ்ரேல் போர் குற்றங்களை இழைக்கிறது.

"காஸாவை பட்டினி போடுவதோடு, காஸா மக்களுக்கு உணவு மற்றும் மருந்தை நாம் மறுக்கிறோம். பொறுப்புக்கூறலை தவிர்ப்பதற்காக நெதன்யாகு பதில்களை மறைக்க முயற்சிக்கிறார். இருப்பினும், அவரின் ஆதரவாளர்கள் சிலர் வெளிப்படையாக - பெருமையுடன்கூட, ஆம், நாங்கள் காஸாவை பட்டினி போடுகிறோம் என்று கூறுகிறார்கள். காஸாவின் சுமார் 20 இலட்சம் மக்களை முற்றிலுமாக அழிப்பதில் எந்த தார்மீக அல்லது இராணுவ நியாயமும் இல்லை" - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# உக்ரைனின் 4 கிராமங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றின

கீவ், மே 29

உக்ரைனின் சுமி பிராந்தியத்தின் 4 கிராமங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ளன என்று அந்த மாகாணத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் துருக்கியில் சமரச பேச்சில் ஈடுபட்டன. இதன்போது, தலா ஆயிரம் பணயக் கைதிகளை மட்டும் பரிமாற உடன்பாடு எட்டப்பட்டது. போர் நிறுத்தம் தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், ரஷ்யா உக்ரைன்மீது கடந்த திங்கட்கிழமை இரவு முதல் தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த 4 நாட்களில் மட்டும் 900 ட்ரோன்களை பயன்படுத்தி ரஷ்யா தாக்கியுள்ளதாக உக்ரைன் கூறியுள்ளது.

இந்த நிலையிலேயே, ரஷ்ய எல்லைக்கு அருகிலுள்ள உக்ரைனின் சுமி மாகாணத்தின்4 கிராமங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரஷ்ய படைகள் அங்கிருந்து தொடர்ந்தும் முன்னேற முயற்சிக்கின்றன என்று சுமி மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# சூடானில் கொலரா நோய்க்கு ஒரு வாரத்தில் 170 பேர் பலி!

கார்ட்டூம், மே 29

சூடானில் பரவிய புதிய கொலரா தொற்று காரணமாக ஒரு வாரத்தில் மட்டும் 170இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

தலைநகரான கார்ட்டூம் மற்றும் ஓம்டுர்மனில் பெரும்பாலான நோய்த் தொற்று பாதிப்புகள் பதிவாகியுள்ளன. ஆனால், வடக்கு கோர்டோபான், சென்னார், காசிரா, வெள்ளை நைல் மற்றும் நைல் நதி மாகாணங்களிலும் காலரா நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூடானின் சுகாதார அமைச்சர் ஹைதம் இப்ராஹிம் கூறுகையில்,

"கடந்த நான்கு வாரங்களில் கார்ட்டூம் பகுதியில் சராசரியாக 600 முதல் 700 வரை கொலரா நோய் தொற்று பதிவாகியுள்ளது" என்றார்.

கொலரா என்பது பற்றீரியாவால் ஏற்படும் ஒரு தொற்று நோய். அசுத்தமான உணவு அல்லது தண்ணீரை குடிப்பதன் மூலம் பரவுகிறது. இது கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் நீரிழப்புக்கு வழிவகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பங்களாதேஷ் தலைமை செயலகத்தில் துணை இராணுவ படையினர் குவிப்பு!

டாக்கா, மே 29

பங்களாதேஷின் புதிய பணி சட்டத்துக்கு எதிராக அரச ஊழியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் டாக்காவில் உள்ள தலைமை செயலகத்தை சுற்றி துணை இராணுவ படையினரை அரசு குவித்துள்ளது.

பங்களாதேஷில் பொதுத் தேர்தலை நடத்தக்கோரி இராணுவ தளபதியும் எதிர்க்கட்சிகளும் அரசின் தலைமை ஆலோசகரான யூனுசுக்கு அழுத்தம் வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில், புதிய பணி சட்டத்தை அரசு அமுல்படுத்தியுள்ளது. இந்த சட்டம் முறைகேடு உள்ளிட்ட தவறான நடத்தையில் ஈடுபடும் அதிகாரிகளை எளிதாக பணி நீக்கம் செய்ய வழி செய்கிறது. இந்த சட்டத்துக்கு எதிராக அரச ஊழியர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.




இந்தச் சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்த இராணுவ தளபதி வாக்கர் திட்டமிட்டுள்ளார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதனால் போராட்டத்தை ஒடுக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

அமைச்சர்களின் வீடுகள் மற்றும் முக்கிய அரச அலுவலகங்கள் அமைந்துள்ள தலைமைச் செயலக வளாகத்தில் துணை இராணுவ படைகள் ஆயுதங்களுடன் நேற்றுமுன்தினம் குவிக்கப்பட்டனர். தலைமைச் செயலக வளாகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தவும் பொலிஸார் தடை விதித்துள்ளனர். (ஐ)

# ரூ. 1.5 இலட்சம் கோடி செலவில் கடற்படைக்கு 12 கப்பல்கள்!

## இந்திய அரசாங்கம் வாங்குகிறது

புதுடில்லி, மே 29

கடல் கண்ணிவெடிகளை கண்டறிந்து அகற்றவும் கண்காணிக்கவும் 44 ஆயிரம் கோடி ரூபாயில் (இலங்கை மதிப்பில் சுமார் ஒரு இலட்சத்து 54 ஆயிரம் கோடி ரூபாய்) செலவில் 12 கப்பல்களை வாங்குவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்தக் கப்பல்களை வாங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு சபை ஒப்புதல் அளித்துள்ளது.

புதிதாக கொள்வனவு செய்யப்படும் இந்தக் கப்பல்கள் கடலுக்கடியில் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளை கண்டறிந்து அழிக்க வல்லவை.

இந்திய பெருங்கடலில் நுழையும் சீனாவின் அணுசக்தி மற்றும் நீர்மூழ்கி கப்பல்கள் கடலுக்கடியில் கண்ணிவெடிகளை வைக்கக்கூடியவை.



இந்த நிலையில், பாகிஸ்தானுக்கு சீனா கண்ணிவெடிகளை விதைக்கவல்ல 8 நீர்மூழ்கி கப்பல்களை வழங்கவுள்ளது.

இந்த நிலையிலேயே இந்திய கடற்படைக்கு கண்ணிவெடிகளை அகற்றவல்ல போர் கப்பல்களை வாங்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ஐ)

# அமெரிக்காவின் மாகாணமாக கனடா இணைய வேண்டும்!

## டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அறிவிப்பு

வாஷிங்டன், மே 29

அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக கனடா இணைந்தால் தமது "கோல்டன் டோம்" ஏவுகணை பாதுகாப்பு கட்டமைப்பில் இலவசமாக இணைய முடியும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடா இதற்கு இணங்காத பட்சத்தில் குறித்த கட்டமைப்பில் இணைவதற்கு 6 ஆயிரத்து 100 கோடி அமெரிக்க டொலர்களை செலவிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நோக்கில் அமெரிக்காவால் கடந்த வாரம் கோல்டன் டோம் ஏவுகணை பாதுகாப்பு கட்டமைப்பு தொடர்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த பாதுகாப்பு கட்டமைப்பில் இணைவதற்கு கனடா விருப்பம் தெரிவித்திருந்த நிலையிலேயே அமெரிக்க ஜனாதிபதி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### ஐ. பி. எல். இறுதிக்கு முந்தைய சுற்று:

## பஞ்சாப் - பெங்களூரு இன்று மோதுகின்றன!

புதுடில்லி, மே 29

ஐ. பி. எல். இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான முதல் போட்டியில் பஞ்சாப், பெங்களூரு அணிகள் இன்று வியாழக்கிழமை மோதவுள்ளன.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு (பிளே ஓவ்) பஞ்சாப், பெங்களூரு, குஜராத், மும்பை அணிகள் தகுதி பெற்றுள்ளன. சென்னை, ராஜஸ்தான், ஹைதராபாத், கொல்கத்தா, லக்னோ, டில்லி ஆகிய அணிகள் தொடரில் இருந்து வெளியேறியுள்ளன.

இந்நிலையில், புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த பஞ்சாப் இரண்டாவது இடம்பிடித்த பெங்களூரு அணியுடன் இறுதிக்கான தகுதி போட்டி - 1 இல் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு மோதுகிறது.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் இறுதிக்கான விலகல் (எலிமினேட்டர்) போட்டியில் குஜராத், மும்பை அணிகள் மோதவுள்ளன. இந்த இரு போட்டிகளும் பஞ்சாப்பில் நடைபெறவுள்ளன. (ஐ)

## 'பல்டி' அடித்து சதத்தை கொண்டாடிய ரிஷப் பந்த்!

லக்னோ, மே 29

ஐ. பி. எல். தொடரில் தான் சதமடித்ததை ரிஷப் பந்த் "பல்டி" அடித்துக் கொண்டாடிய காணொலி வலைதளங்களில் பிரபலமாகியுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் கடைசி லீக் ஆட்டம் லக்னோவில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்காக ஆடிய ரிஷப் பந்த 118 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய ரிஷப் பந்த் இந்த சதத்தின் மூலம் தன்மீதான விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்தார்.

தான் சதமடித்ததை ரிஷப் பந்த் "பல்டி" அடித்து கொண்டாடிய காணொலி இப்போது வலைதளங்களில் பிரபலமாகியுள்ளது. (ஐ)





## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் இகா - ரடுகானு மோதல்!

பாரிஸ், மே 29

பிரெஞ்சு ஒப்பன் ரென்னிஸின் இரண்டாவது சுற்றில் போலந்தின் இகா ஸ்வியாரெக், பிரிட்டனின் எம்மா ரடுகானு ஆகியோர் மோதவுள்ளனர்.

கிராண்ட்ஸலம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஒப்பன் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடக்கிறது.


இதில், மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் நடப்பு சம்பியனும் 5ஆம் நிலை வீராங்கனையுமான போலந்தின் இகா ஸ்வியாரெக் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

அவர் ஸ்லோவாக்கியாவின் ரெபேக்கா ஸ்ராம்கோவாவை 6-3, 6-3 என்ற நேர் செற் கணக்கி வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு நுழைந்தார். இகா ஸ்வியாரெக்குக்கு பிரெஞ்சு ஒப்பனில் இது தொடர்ச்சியான 22ஆவது வெற்றியாக அமைந்தது. 2ஆவது சுற்றில் இகா ஸ்வியாரெக், பிரிட்டனின் எம்மா ரடுகானுவை எதிர்கொள்கிறார்.

ரடுகனானு தனது முதல் சுற்றில் 7-5, 4-6, 6-3 என்ற செற் கணக்கில் சீனாவின் வங் சின்யுவை தோற்கடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஜித்தேஷ் அதிரடி ஆட்டம்

## இறுதிக்கு முதல் சுற்றுக்கு பெங்களூரு அணி தகுதி!



லக்னோ, மே 29

ஜித்தேஷ் சர்மாவின் அதிரடியான ஆட்டத்தால் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றது.

ஐ.பி.எல். தொடரின் கடைசி லீக் ஆட்டம் லக்னோவில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரு அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ 20 ஓவரில் 3 விக்கெட்களுக்கு 227 ஓட்டங்களை குவித்தது. தொடக்க வீரர் பிரீட்ஸ்கே 12 பந்துகளில் 14 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மிற்செல் மார்ஷ் உடன் ரிஷப் பந்த் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மிற்செல் மார்ஷ் அரைச்சதம் கடந்து 37 பந்துகளில் 67 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய ரிஷப் பந்த் சதமடித்து 118 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூரு களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பிலிப் சால்ட் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

விராட் கோலி அதிரடியாக ஆடி 54 ஓட்டங்களில் வெளியேறினார். அப்போது, பெங்களூரு 4 விக்கெட்கள் இழப்புக்கு 123 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த மயங்க் அகர்வால் - ஜித்தேஷ் குமார் அதிரடியாக ஆடினர். கிடைத்த பந்துகளை சிக்ஸர், பௌண்ட்ரிகளாக விளாசினர். ஜித்தேஷ் சர்மா அரைச்சதம் கடந்தார்.

இறுதியில், பெங்களூரு அணி 18.4 ஓவரில் 230 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. அத்துடன், புள்ளிப்பட்டியலில் 2ஆவது இடம்பிடித்து இறுதி போட்டிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

ஜித்தேஷ் சர்மா 33 பந்துகளில் 85 ஓட்டங்களையும் மயங்க் அகர்வால் 41 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். (ஐ)




## ரியல் மட்ரிட் அணியிலிருந்து விடைபெற்றார் லூகா மோட்ரிச்

மட்ரிட், மே 29

உதைபந்தாட்ட உலகின் தலைசிறந்த கழக அணிகளில் ஒன்று ரியல் மட்ரிட். அந்த அணியில் இருந்து விலகினார் லூகா மோட்ரிச்.

கடந்த சனிக்கிழமை நடந்த ஆட்டம்தான் ரியல் மட்ரிட் அணிக்காக ஸ்பெயின் மண்ணில் அவர் விளையாடிய கடைசி போட்டி. அதில் 2-0 என்ற கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றி பெற்றிருந்தது.

சுமார் 13 ஆண்டு காலம் ரியல் மட்ரிட் அணியில் முக்கிய வீரராக லூகா ஜொலித்தார். 2012இல் ரியல் மட்ரிட்டில் அவரின் பயணம் தொடங்கியது. அந்த அணிக்காக 591 போட்டிகளில் விளையாடி உள்ளார். மொத்தம் 30 வெற்றிக் கிண்ணத் தொடர்களை அவர் அங்கம் வகித்த ரியல் மட்ரிட் அணி வென்றுள்ளது. இதில் 6 சம்பியன்ஸ் லீக் பட்டங்களாகும்.

"இந்த தருணம் நான் விரும்பாத ஒன்று. ஆனால், வந்துவிட்டது. இதுவொரு நீண்ட நெடும் பயணம். இந்த கழகத்கத்தின் தலைவர், புளோரன்டினோ பெரெஸ், அணியின் பயிற்றுநர்கள், சக வீரர்கள், எனது குடும்பம், ரசிகர்கள் என எல்லோருக்கும் எனது ஆழ்மனதிலிருந்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்", என்று மோட்ரிச் போட்டியின் இறுதியில் தெரிவித்தார். (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் மேத்வதேவ் அதிர்ச்சி தோல்வி

பாரிஸ், மே 29

பிரெஞ்சு ஒப்பன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் 11ஆம் நிலை வீரரான டேனியல் மேத்வதேவ் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் முன்னணி வீரரான ரஷ்யாவின் டேனியல் மேத்வதேவ், தரவரிசையில் 18ஆவது இடத்தில் உள்ள பிரிட்டனின் கமரூன் நோரியுடன் மோதினார்.

இதில் கமரூன் நோரி 7-5, 6-3, 4-6, 1-6, 7-5 என்ற செற் கணக்கில் டேனியல் மேத்வதேவை தோற்கடித்தார்.




டேனியல் மேத்வதேவ், பிரெஞ்சு ஒபனில் முதல் சுற்று [illegible] இது 6ஆவது [illegible]. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரன்...

வடமராட்சி ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், இந்த சந்திப்பு வெள்ளிக்கிழமை (நாளை) நடைபெறலாம் என்றும் அவர் கூறினார்.

இருவரும் முன்னெடுக்கும் பேச்சு பரந்துபட்ட அளவிலான ஒற்றுமைக்கான பேச்சாகவும், வாய்மூலமான பேச்சாக மாத்திரம் இல்லாது எழுத்து மூலமானதாகவும் அமைய வேண்டும் என்றும் சிவாஜிலிங்கம் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## ஒழுக்கமான...

பொறுப்பு உள்ளது.

நாட்டுக்குள் எதிர்பார்க்கப்படும் ஒழுக்கத்தின் புதிய திருப்பத்தை அரசியல் முறைமை மாற்றத்தில் மாத்திரம் செய்ய முடியாது. பெறுமதி மிகுந்த ஒழுக்க கட்டமைப்பு மற்றும் பெறுமதியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட சமூக பிணைப்புக்களையும் அந்த பணி சார்ந்துள்ளது என்று நேற்றைய தினம் அம்பாந்தோட்டையில் கலாநிதி ஓமல்பே சோபித தேரரின் 75ஆவது ஜனன தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோது ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## உகந்தைமலை...

ஏற்பட்டது போன்று ஏற்படுவதற்கு வழியேற்படுத்தும்"

- இவ்வாறு கூறியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழு பேச்சாளரும் எம். பி.யுமான ஞா. சிறீநேசன்.

உகந்தைமலையில் முருகன் ஆலயம் அமைக்கின்ற விடயத்தில் வனவளத் திணைக்களத்தினர் தடைகளை விதித்திருந்தார்கள். ஆனால், புத்தர் சிலை வைக்கின்ற விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். இது, தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - கொக்குவிலில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த உகந்தை மலையில் ஒரு புத்தர் சிலையை நிறுவி இருக்கின்றார்கள். உண்மையில் நாங்கள் எந்த மதத்துக்கும் மரியாதை கொடுக்கிறவர்கள். புத்த பகவானை பொறுத்தவரையில் அவர் உண்மையில் அமைதியாக மக்கள் வாழ வேண்டும், குழப்பங்கள் இருக்கக் கூடாது, காருண்யம் பேணப்படவேண்டும், எந்த இடத்திலும் குழப்பங்கள், கலவரங்கள், சண்டைகள் தனது பெயரால் இடம்பெறக்கூடாது என விரும்புபவர்.

இவ்வாறு இருக்கத்தக்கதாக, உகந்தை மலையில் முருகன் ஆலயத்துக்கு பக்கமாக இப்போது சட்ட விரோதமாக ஒரு புத்தர் சிலையை அமைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக இப்போது அந்த இடத்தில் ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. நாங்கள் இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்ற ஒரு விடயம் இந்த விடயத்தில் நீங்கள் ஓர் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

சகல மக்களையும் சமத்துவமாக, சமதர்மமாக வழிநடத்தவேண்டும் என்கின்ற உங்களுடைய (அரசாங்கத்தின்) வார்த்தைகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்ற வேளையில், இந்த நாட்டில் மீண்டும் ஒரு கலாசார ரீதியான, பண்பாட்டு ரீதியான ஓர் ஆக்கிரமிப்பை அல்லது முருகன் ஆலயத்துக்கு பக்கத்தில் இன்னும் ஒரு சிலையை நிறுவுவதன் மூலமாக நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தாமல், இவ்வாறான சட்ட விரோதமான செயல்பாடுகளை அரசு தடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஜூன் 7...

இதன்போது தலைப்பிறை தென்பட்டதையடுத்து இன்று வியாழக்கிழமை துல் ஹிஜ்ஜஹ் மாதத்தின் முதலாம் பிறை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜூன் 7ஆம் திகதி ஹஜ் பெருநாள் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முல்லைத்தீவில்...

மாங்குளத்தில் இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் வருகை தந்து ஆதரவு வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். (ஐ)

## ஜனாதிபதியின்...

மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த 3 தசாப்தங்களாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டிருந்தன. இந்தக் காலப் பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவோர் உதவிகளும் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன், இங்கிருந்த உட்கட்டுமானங்களும் முழுமையாக அழிவடைந்திருந்தன. இந்த நிலையிலேயே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உலக வங்கியை வடக்கு, கிழக்கின் துரித அபிவிருத்தியில் கவனம் செலுத்துமாறு கோரியிருந்தார்.

அதற்கு அமைவாக உலக வங்கிக் குழுவினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பயணம் மேற்கொண்டு பல்வேறு இடங்களையும் பார்வையிட்டிருக்கின்றனர். அதற்கு அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். போரால் மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை ஒருபோதும் வந்து பார்வையிடாத அதிகாரிகள் சிலர் கொழும்பிலிருந்துகொண்டு, உலக வங்கியின் திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஏன் வழங்கப்படுகின்றன என்று கேள்வி எழுப்புவது பொருத்தமற்றது. அவர்களும் இங்கு வந்து நிலைமைகளை பார்வையிட்டால் எமது கோரிக்கைகளின் நியாயத்தன்மையை ஏற்றுக்கொள்வார்கள்.

உலக வங்கி சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகள் சுற்றுலாத் துறைக்குரிய வளத்தைக் கொண்டிருக்கின்றன. ஆனால், அங்குள்ள இறங்குதுறைகள் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை அபிவிருத்தி செய்தாலே அதிகளவு சுற்றுலாவிகளை கவரமுடியும். அதேபோல வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பயண நேரத்தையும் - தூரத்தையும் சுருக்கும் வகையில் கொக்கிளாய் - புல்மோட்டை பாலம் அமைக்கப்பட வேண்டும். ஏ - 9 வீதி எவ்வாறு சுற்றுலாவிகளுக்காக இலகுவாக்கப்பட்டுள்ளதோ அதேபோன்று, வடக்குக்கு வரும் சுற்றுலாவிகள் கிழக்குக்கும், கிழக்குக்கு வரும் சுற்றுலாவிகள் வடக்குக்கும் வருவதற்கான வழிகளும் இலகுவாக்கப்படவேண்டும் - என்றார்.

ஆளுநரின் ஆலோசனைக்குழு உறுப்பினர் கலாநிதி அகிலன் கதிர்காமர், உலக வங்கியின் திட்டங்கள் ஊடாக வேலை வாய்ப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட போகின்றன என்பது தொடர்பிலும் கேள்வி எழுப்பினார்.

உலக வங்கிக் குழுவுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஆளுநருக்கு நன்றிகளை தெரிவித்த உலக வங்கியின் இலங்கைக்கான செயல்பாட்டு முகாமையாளர் அபிட் கலி, மாகாணத்தால் வேலைத் திட்டங்களை முன்னுரிமைப்படுத்துமாறும் கால எல்லையை நிர்ணயித்து செயல்படுவோம் - என்றும் கூறினார். (ஐ)

புதிய கோவிட் 19 திரிபு:

# மருத்துவமனைகளில் பி.சி.ஆர். சோதனை!

கொழும்பு, மே 29

புதிய கோவிட் 19 திரிபால் ஏற்படும் உலகளாவிய அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, சுகாதார அமைச்சு சில மருத்துவமனைகளில் பி.சி.ஆர். பரிசோதனையை அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பி. சி. ஆர் பரிசோதனை வசதிகளைக் கொண்ட மருத்துவமனைகள் தற்போது கோவிட் 19 நோயாளிகளைக் கண்டறிய அதிக அவதானத்துடன் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், காய்ச்சலுக்காக மருத்துவமனைகளில் சேரும் அல்லது சிகிச்சை பெறும் நோயாளிகள் தொடர்பான கண்காணிப்பை அதிகரிக்க மருத்துவ மனைகளுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை தொடர்ந்து நிலைமையை உன்னிப்பாகக் கண்காணிக்கும் என்றும், ஆனால், உடனடியாக எந்த கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியாது எனவும் அனில் ஜாசிங்க மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## வடக்கு, கிழக்கில்...

அத்துடன், எல்லோரும் அமைதிக்காகவே போராடினர் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். பிரபாகரன் அமைதிக்காகவா போராடினார் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அந்த நேர்காணலில், யுத்தம் நிறைவடைந்தமை தொடர்பில் எமக்கு பெருமகிழ்ச்சி இருக்கிறது. அவ்வாறில்லையெனில் இன்று இந்த நாடு இந்தளவுக்கும் எஞ்சியிருக்காது. நிச்சயம் பிளவு ஏற்பட்டிருக்கும். எவ்வாறிருப்பினும் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் நாட்டின் முன்னேற்றப் பயணம் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இல்லை.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் நாட்டை ஆட்சி செய்த அனைத்து ஆட்சியாளர்களும் அதற்கு பொறுப்புக் கூறவேண்டும். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள சில இலங்கை தமிழர்கள் தமது வீசாவைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, தமது வர்த்தகங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று கூறிக் கொண்டிருக்கின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு தம்மால் மீண்டும் இலங்கைக்கு செல்ல முடியாது என்பதை அவர்கள் அந்த நாடுகளிடம் கூறுகின்றனர். இவ்வாறான செயல்பாடுகளால் நாட்டுக்கு ஓரளவு அச்சுறுத்தல் காணப்படுகிறது.

அந்த அச்சுறுத்தலிலிருந்து முற்றாக மீள்வதற்கும், ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் யாரோ ஒருவர் முன்பாக மண்டியிடுவதை விடுத்து, பலம்மிக்க நாடாக மாற்றமடையவேண்டும். தேசிய பாதுகாப்பு தொடர்பில் கரிசனை கொள்ளாமல், உறங்கிக் கொண்டிருந்தால் மீண்டுமொரு பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்படலாம். இலங்கையின் தேசிய பாதுகாப்பு என்பது சர்வதேச நாணய நிதியத்தின் பொறுப்பல்ல.

எனவே, படைகளின் ஆளணியைக் குறைப்பதாகக் கூறுவதை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. படைகளை கலைத்து அதன் மூலம் மீதப்படுத்தப்படும் 8 ஆயிரம் கோடி ரூபாயை கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

தேசிய பாதுகாப்பு என்பதை நான் பார்க்கும் கோணத்தில் இந்த நாட்டில் காணவில்லை. பொது மக்கள் பாதுகாப்பும்கூட அச்சுறுத்தல் மிக்கதாகவே காணப்படுகிறது.

பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நிறுவனங்களின் ஏதேனுமொரு பலவீனத்தின் காரணமாகவே நாட்டில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவேதான் அனுபவமும் அறிவும் மிக்கவர் அந்த பொறுப்பை ஏற்கவேண்டும் என்று நாம் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

வடக்கு, கிழக்கில் முகாம்கள் அகற்றப்படுகின்றன என்றால் அதன் ஊடாக எதிர்மறையான பலன்களே கிடைக்கும். வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் நினைவேந்தல்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. தொடர்ச்சியாக அதற்கு இடமளித்தால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் உருவாவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுப்பதைப் போன்றதாகிவிடும்.

தேசிய போர் வீரர் தினத்தில் உரையாற்றியபோது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அமைதிக்காகவே அனைவரும் போராடினர் என்று கூறியதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அமைதிக்காக தலதா மாளிகையின்மீதோ, சிறீ மகா போதியின் மீதோ தாக்குதல்களை மேற்கொள்ள முடியாது. பிரபாகரன் அமைதிக்காகவா போராடினார்? இவ்வாறு கூறினால் அதனை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஜனாதிபதி அவரது நிலைப்பாட்டைக் கூறியதால் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த இடத்தில் ஓடிச் சென்று நீ கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என கூச்சலிடுவதற்கு நான் முட்டாள் இல்லையல்லவா? என்றும் கூறினார். (ஐ)

## திருமலை...

தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆட்சியமைப்பதற்கு 13 உறுப்பினர்கள் தேவை. சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி திருமலை மாநகரில் ஆட்சியமைக்க நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியுள்ளது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அந்தக் கட்சி மாநகர முதல்வரை அறிவித்துள்ளது. (ஐ)

## தமிழின...

உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

தமிழின அழிப்பு நினைவகம் என்ற பெயரில் அமைந்துள்ள இந்த நினைவுத் தூபியை பிரம்டன் மேயர் பற்றிக் பிரவுண் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

இந்நிலையில் இந்த நினைவகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்கு பின்னர் சேதப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. தமது முகங்களை மூடியவாறு அங்கு வந்தவர்கள் நினைவகத்தை சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து பீல் பிராந்திய பொலிஸில் முறையிடப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. எனினும், அங்கு பொருத்தப்பட்ட சி. சி. ரீ. வி. கமெராக்களின் உதவியுடன் சந்தேகநபர்கள் வெகு விரைவில் கைது செய்யப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# வடக்கில் காணிகள் விடுவிக்கும்போது தெற்கில் உள்ள சிலர் அதற்கு எதிர்ப்பு!

## வடக்கு மாகாண ஆளுநர் கவலை



யாழ்ப்பாணம், மே 29

**அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் பாதைகள் மற்றும் காணிகள் விடுவிக்கப்படும்போது தென் பகுதியிலுள்ள சில அரசியல் வாதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இலங்கைக்கான நோர்வேயின் பிரதித் தூதுவர் மார்ரைன் அம்டால் பொத்தெமுக்கு கவலையுடன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் பிரதித் தூதுவர், வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தின் நேற்று தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தில் காணப்படும் குடிதண்ணீர்ப் பிரச்னை தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், கடல் நீரை சுத்திகரிக்கும் செயற்றிட்டத்தின் ஊடாக குடிதண் ணீர் வழங்கல் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்கு அதிகளவில் செலவிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சுற்றுலாத்துறை அபிவிருத்தி யாழ்ப்பாணத்தில் முக்கியமானதாக மாறிவரும் நிலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிமுறை இங்கு இல்லை என்றும் இதன் காரணமாக பல சவால்களை மக்கள் எதிர்கொள்வதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய இரண்டு துறைகளினதும் உற்பத்திப் பொருட்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும் அவற்றை முடிவுப் பொருட்களாக்கி ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் வலியுறுத்தியிருந்தார். (அ)

# குற்றச்சாட்டுகளை நிரூபிக்காவிட்டால் மகிந்தவிடம் மன்னிப்பு கோரவேண்டும்!

## பொதுஜன பெரமுன வலியுறுத்து

கொழும்பு, மே. 29

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியாவிட்டால் அவரிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மன்னிப்பு கோர வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு-தங்கக் குதிரை, தங்க மலசல கூடம் போன்ற கதையெல்லாம் பொய்யென தற்போது நிரூபனமாகிவருகின்றது. போரை முடிவுக்கு கொண்டுவந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட கதைகளெல்லாம் போலியானவை மாயையென்பது தெரியவருகின்றது. அவருக்கு சேறு பூசுவதற்காகவே இப்படியான கருத்துகள் பரப்பட்டன.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் குற்றமற்றவர் சுத்தமானவர் என்பது தற்போது நிரூபனமாகிவருகின்றது. மகிந்தவுக்கு எதிராக இருப்பதாகக் கூறப்பட்ட கோப்புகள் எங்கே என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கேட்கின்றோம்.

மகிந்தவுக்கு சீனா பணம் வழங்கியதாகவும், கணக்கிலக் கம்கூட இருப்பதாகவும் அநுர கூறினார்.

கணக்கிலக்கத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கி விசாரணை நடத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல் எதையும் செய்யாத மகிந்த ராஜபக்ஷவிடம் மன்னிப்பு கோர வேண்டும்-என்றார். (அ)

# இலங்கையின் வளர்ச்சி, முன்னேற்றத்துக்கான உறுதிப்பாட்டை மீள வலியுறுத்தியது இந்தியா!

புதுடில்லி, மே. 29

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், புதுடில்லியில் உள்ள இந்தியாவின் பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்குச் சென்றுள்ள இலங்கை பாராளுமன்றக் குழுவைச் சந்தித்துள்ளார்.

இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீரில் நடத் தப்பட்ட பஹல்காம் தாக்குதலுக்கு இலங்கை கண்டனம் வெளியிட் டமை மற்றும் அனுதாபம் தெரிவித்தமையை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வரவேற்றுள்ளார்.

இந்தியாவின் அண்டைய நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கை குறித்தும், இரு நாட்டு மக்கள் தொடர்பு போன்றவை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இந்த சந்திப்பின்போது இலங்கையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற் கான இந்தியாவின் உறுதிப் பாட்டை மீண்டும் வலியுறுத்திய தாக, அமைச்சர் ஜெய்சங்கர் தமது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 24 இலங்கை பங்கேற்பாளர்களைக் கொண்ட இந்தக் குழு புதுடில்லியில் நடைபெறும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக இந்தியாவுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வாழ்க்கைச் செலவு இரு மடங்காக உயர்வு!




கொழும்பு, மே. 29

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, கடந்த ஆண்டு நாட்டில் தனிநபர்களின் வாழ்க்கைச் செலவு இரு மடங்காக அதிகரித் துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இருப்பினும், 2023 உடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் வாழ்க்கைச் செலவு மிகக் குறைந்த அள வில் அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர தெரிவித்தார். (அ)

# வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம்கள் ஒன்றிணைந்தால் வெற்றி பெறலாம்!

## சுட்டிக்காட்டுகிறார் நிசாம் காரியப்பர்

கொழும்பு, மே. 29

முல்லைத்தீவு காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வாபஸ் பெற்றிருப்பதானது தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிணைந்த போராட்டத்துக்கு கிடைத்திருக்கின்ற வெற்றியாகவே கருதுகிறோம் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முல்லைத்தீவு காணி சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பாரதூர தன்மைகள் மற்றும் அதனால் ஏற்படவுள்ள பாதக விளைவுகள் தொடர்பாக தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் ஒற்றுமையுடன் குரல் கொடுத்ததன் விளைவாகவே குறித்த சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வாபஸ் பெற்றிருக்கிறது.

இது தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு கிடைத்திருக்கின்ற பாரிய வெற்றியாகும்.

மேலும்,

இலங்கை வாழ் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்க ளைச் சேர்ந்த மக்கள் எதிர்காலத்திலும் தங்களுடைய உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக இவ்வாறு ஒன்றாக செயற்படவேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது-என்றார். (அ)

# விசேட நடவடிக்கையில் 528 பேர் கைது!

கொழும்பு, மே 29

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் போதைப் பொருட்களுடன் 528 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 164 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 180 பேரும் கஞ்சா போதைப்பொருளுடன் 178 பேரும் போதை மாத்திரைகளுடன் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மன்னார் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் காற்றாலை மின் திட்டத்துக்கு எதிர்ப்பு

மன்னார், மே 29

மன்னார் மாவட்டத்தில் புதிதாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல தரப்பினரும் எதிர்ப்புகளை பதிவு செய்தனர்.

இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலின் கீழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று புதன் கிழமை மன்னார் மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மாவட்ட அபிவிருத்தி சார்ந்த பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் புதிதாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர். அத்துடன், கனிய மணல் அகழ்வுக்கும் சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

கனிய மணல் அகழ்வு தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்றைய கூட்டத்தில் அது சார்ந்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான், து. ரவிகரன், முத்து முஹமட், ஜெகதீஸ்வரன் மற்றும் மாவட்ட பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை பிரதானிகள், அரச பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org